6th September 1960]

SRI A. VEDARATHNAM : மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் ஐந்தாவது ஐட்டத்தில் உள்ள மானங்கொண்டான் பம்பிங் ஸ்கீம், தென்னடியார் பம்பிங் ஸ்கீமுக்கு முந்தி ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக லட்ச ரூபாய் அரசாங்கம் செலவு செய்திருக்கிறது. ஐந்து இடத்தில் ஐந்து பம்பிங் ஸ்கீம் ஏற்படுத்தி, ஒவ்வொரு இடத்திலும் 100 எக்கருக்கு அதிகமாகப் பாசனத்திற்குத் திட்டமிட்டிருந்துங்கூட காத்திருக்கவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? நூறு, இருநூறு ஏக்கருக்காவது பாசனம் கொடுக்க முன்வரக்கூடாதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு, மூன்று திட்டங்களை நிறைவேற்றும்போது தண்ணீர் போதிய அளவு கிடைக்குமா என்பதுதான் முக்கியமாகப் பரிசிலிக்கவேண்டிய விஷயம். அதைப் பரிசிலனை செய்வதிலேதான் கொஞ்சம் தாமதம் ஏற்படுகிறது.

Air-port (Vellore)

* 479 *Q.*—SRI A. A. RASHEED : SRI P. SARATHI : } Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have recommended to the Union Government for converting the landing ground at Vellore into a regular air-port; and

(*b*) if so, the reply received from them?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) No Sir. But our information is that regrading and levelling of the strip is in progress and that further improvements to the strip and a small terminal building are provided for in the Third Plan.

SRI A. A. RASHEED : May I know whether Government have received mahajars from public of Vellore for converting the landing ground into an Air Port? If so what is the action taken by Government? Is the Hon. Minister aware of the fact that the present landing ground remains unused for a long number of years?

THE HON. SRI P. KAKKAN : I have no facts with me now whether we have received any petition or not. The Indian Airlines Corporation have not shown any interest for an aerodome for Vellore. The Director-General has added that if at any time the Indian Airlines Corporation decides to operate air service at Vellore, the necessary facilities will be provided by that department.

SRI A. GOVINDASAMY : நெய்வேலி நிலக்கரி திட்டத்தை உத்தேசித்து அதன் அருகே ஏற்கனவே இருந்த உளுந்தூர் பேட்டை விமான நிலயத்தை மீண்டும் கொண்டுவர அரசாங்கம் ஆலோசிக்குமா?

MR. SPEAKER : மூலக் கேள்வி வேலூரில் விமான நிலையம் ஏற்படுத்துவதைப் பற்றியது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் நெய்வேலிக்கு அருகில் விமான நிலையம் ஒன்று

ஏற்படுத்துவதைப்பற்றிக் கேட்கிறார். அந்தக் கேள்வி 'ஔட் ஆப் ஆர்டர்' ஆகும். ஏனென்றால், உபகேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தம் உடையதாக இருக்கவேண்டும்.

Polytechnics

* 480 Q.—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தனியார் துறையில் ஆரம்பிக்க இருக்கும் பாலிடெக்னிக்குகள் எத்தனை? எங்கெங்கே?

(ஆ) அவற்றில் போதிக்கப்போகும் தொழில்கள் என்னென்ன?

(இ) இவற்றிற்கு அரசாங்கம் அளிக்கும் உதவி என்ன?

(ஈ) அவைகள் எப்போது துவங்கும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) It is proposed to establish 10 more polytechnics in the Third Plan period, i.e., during 1961—65. The distribution of these between the public and the private sector and their location have not yet been settled. Tentatively, it is proposed that 8 of the 10 polytechnics should be non-Government Institutions.

(b) Usually instruction is imparted, to start with, in the three basic courses, viz., Civil, Mechanical and Electrical Engineering.

(c) The State Government give 25 per cent of the total non-recurring cost and 50 per cent of the recurring cost arrived at after deducting the tuition fees, any other net income derived in working the institution and the grant given by the Government of India.

(d) It has been tentatively planned to start 3, 3, 2 and 2 polytechnics in the first four years of the Third Plan period respectively.

SRI A. VEDARATHNAM : அரசாங்கம் கொடுக்கும் உதவி அல்லாமல் தனியார் இந்தப் பாலிடெக்னிக்கை ஆரம்பிக்கவேண்டுமானால், அவர்கள் இதற்காக வைக்கவேண்டிய மூலதனம் எவ்வளவு என்பதைத் தயவுசெய்து அறிவிக்கமுடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதை மாற்றியமைக்கவேண்டுமென்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால், மத்திய சர்க்காரிடத்திலிருந்து அதுபற்றி முடிவான தகவல் இன்னும் வரவில்லை. தகவல் வந்தால்தான் சொல்லமுடியும்.

SRI A. GOVINDASAMY : நெய்வேலிப் பகுதியில் அரசாங்கத் துறையில் ஒரு பாலிடெக்னிக் திறக்க அரசாங்கம் முயற்சிக்குமா?